**இந்திய உதவியுடன் நிர்மாணிக்கப்படவுள்ள 100 மாதிரிக் கிராமங்களுள் முதலாவது கிராமம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது**

வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் மாதிரிக் கிராமங்கள் செயல்திட்டத்தின் கீழ் இந்திய உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது மாதிரிக் கிராமம் , ஜூலை 6, 2019 அன்று நடைபெற்ற ஒரு விசேட வைபவத்தில் , கம்பஹா மாவட்டத்தின் ரனிதுகம எனுமிடத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டதுடன் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகள் பயனாளிகளுக்கு கையளித்து வைக்கப்பட்டன.

வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சர் கௌரவ சஜித் பிரேமதாச , இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமராதுங்க மற்றும் இந்திய பிரதி உயர் ஸ்தானிகர் டாக்டர் . ஷில்பக் அம்புலே ஆகியோர் இணைந்து கிராமத்தை அங்குரார்ப்பணம் செய்ததுடன் வீடுகளையும் கையளித்து வைத்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர், மேல் மாகாணத்திலிருந்தான அரசியல் தலைவர்கள், சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகள் மற்றும் பிரதேசத்திலிருந்தான பெருமளவிலான மக்கள் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

இலங்கை நாணயத்தில் 1200 மில்லியன் ரூபாய்கள் பெறுமதியான இந்திய நன்கொடை உதவித் திட்டத்தின் கீழ் , இலங்கை முழுவதிலுமாக, 2400 வீடுகளை உள்ளடக்கியதாக 100 மாதிரிக் கிராமங்களை நிர்மாணிப்பதற்கு வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சுடன் இந்திய அரசாங்கம் பங்குதாரராக இணைந்து கொண்டது . இந்த 2400 வீடுகள், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள மக்கள் மற்றும் பெருந்தோட்டப் பிரதேசங்களிலுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்காக என இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் 60,000 வீடுகளுக்கு மேலதிகமானவையாகும்.

மாத்தறையில் ருகுணுப் பல்கலைக் கழகத்தில் மிகப் பெரிய பல்கலைக் கழக கேட்போர் கூடம் உட்பட , இலங்கை முழுவதிலுமாக, பல்வேறு துறைகளில் சுகாதாரம் , கல்வி, திறன் அபிவிருத்தி, உட்கட்டமைப்பு, தொழில் பயிற்சி என 70 இற்கு மேற்பட்ட மக்கள் நலன்சார்ந்த அபிவிருத்திச் செயல்திட்டங்களை இந்தியா மேற்கொண்டுள்ளது . அத்தகைய, 20 செயல்திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இலங்கையில் இந்திய அரசாங்கத்தின் ஒட்டுமொத்த அபிவிருத்திச் செயல்திட்டங்கள் US $ 3 பில்லியன்களை அண்மித்தவையாகும், அவற்றுள் US $ 560 மில்லியன்கள் தனியே நன்கொடைத் திட்டங்களாக அமைந்துள்ளன.

*****

Colombo
6 July, 2019